விலை ரூ. 50
பக்கங்கள் 12

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 135

திங்கட்கிழமை 10 ஏப்ரல் 2023

பங்குனி 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




## போதகர் தலைமையில்



உதயனுக்குள் காட்டுமிராண்டித்தனமாக அட்டூழியம் செய்த கும்பலைச் சேர்ந்த சிலர்

# ‘உதயன்’ அலுவலகத்துக்குள் புகுந்து மதக்குழுவொன்று பெரும் அட்டூழியம்!



போதகர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 10

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் ‘உதயன்’ பத்திரிகை தலைமையகத்துக்குள் அத்துமீறிப் புகுந்து போதகர் ஒருவர் தலைமையிலான மதக்கும்பல் ஒன்று, ஊடகப்பணியாளர்களை அச்சுறுத்தி பெரும் அடாவடியில் நேற்றுப் பிற்பகல் ஈடுபட்டது. »11

## ‘உதயன்’ சம்பவத்துக்கு சைவமகாசபை கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 10
ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடும் வகையில் மதக் குழுவினர் ‘உதயன்’ பத்திரிகை »11

## ஊடக சுதந்திரம் மீது தொடுக்கப்பட்ட போர்

‘உதயன்’ சம்பவத்துக்கு கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 10
‘உதயன்’ பத்திரிகை அலுவலகத்தை முற்றுகையிட்டு ஊழியர்கள் மேல் தாக்குதல் முயற்சி »11

## வன்முறையைத் தூண்டுவோரை சட்டத்தின்முன் நிறுத்துங்கள்

உதயனுக்குள் புகுந்த மதக்குழு தொடர்பில் மறவன்புலவு சச்சிதானந்தம் ஆவேசம்

யாழ்ப்பாணம், ஏப். 10
வன்முறையைத் தூண்டுவோரை, சட்டங்களை அப்பட்டமாக மீறுவோரைத் தலையிட்டு »09

## மதக்கும்பல் அட்டூழியம்;

### அமைச்சர் நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஏப்.10
‘உதயன்’ பத்திரிகை தலைமையகத்துக்குள் புகுந்து குழுவொன்று அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பில் பொதுமக்கள் »11

### ஜனாதிபதியின் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம், ஏப்.10
‘உதயன்’ பத்திரிகை தலைமையகத்துக்குள் புகுந்து குழுவொன்று அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட சம்பவம் தொடர்பில் »09

## தமிழர்களின் சமகால விவகாரம்: பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்

வவுனியா, ஏப். 10
அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமிழர்களின் இருப்பைப் பாதுகாப்பதற்குமான பொதுக்கட்டமைப்பு வவுனியாவில் நேற்று உருவாக்கப்பட்டது.
தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக »09

## நயினாதீவில் வீதிக்கு பிக்குவின் பெயர்

மீண்டும் புதிதாக நட்ட பலகையால் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஏப். 10
நயினாதீவில் வீதி ஒன்றுக்கு பிக்கு ஒருவரின் பெயர், மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் »09

## யாழ். பல்கலை மாணவர்கள் 17பேர் போதைப்பொருளுடன் நேற்றுக்கைது

15 பேர் சிங்கள மாணவர்கள்
ஜனாதிபதியின் கருணையால் விடுவிப்பு விரிவு:- பக்.09

## செட்டிகுளத்திலும் திடீர் ‘புத்தர்’

வவுனியா, ஏப். 10
வவுனியாவில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பெண் நீதிபதி, சட்டத்தரணி ஆடை நடைமுறை மாற்றம்!

கொழும்பு, ஏப். 10
பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் இனி மேல் நீதிமன்றத்துக்கு பாவடை - சட்டை அல்லது நீளக்காற்சட்டை அணிந்து சமுகமளிக்க முடியும் என் அறிவிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் பெண் நீதிபதிகள், சட்டத்தரணிகள் புடைவை அணிந்தே நீதிமன்றத்துக்கு சமுகமளிக்க முடியும் என்ற கட்டுப்பாடு நடைமுறையில் இருந்தது.

புதிய நடைமுறைகளின் பிரகாரம் பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் கறுப்பு காற்சட்டை, வெள்ளைச் சட்டை அணிந்து அதன் மேல் கறுப்பு கோட் மற்றும் சப்பாத்து அணிந்து நீதிமன்றத்துக்கு சமுகமளிக்கலாம். அல்லது கறுப்பு பாவாடை வெள்ளைச் சட்டை என்பவற்றுடன் அதன் மேல் கறுப்பு கோட், சப்பாத்து அணியலாம்.

அதேவேளை காற்சட்டைகள், பாவடை என்பன நீண்டதாகக் காணப்படவேண்டும். மேற்சட்டை உயரமான கழுத்து மற்றும் நீண்ட கைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

இதேவேளை- ஆண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான ஆடையில் மாற்றம் இல்லை என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-6)



யாழ்ப்பாணம், மரியன்னை பேராலயத்தில் புனித உயிர்த்த ஞாயிறு கூட்டுத்திருப்பலி, பேராலயத்தின் பங்குத்தந்தையும் மறைமாவட்ட ஆயருமான கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ஏ-14)

## இனப்படுகொலை வாரம் இலங்கை கரிசனையாம்

கொழும்பு, ஏப். 10
கனடாவில் புலம்பெயர் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் 'இனப்படுகொலை அறிவூட்டல் வாரம்' தொடர்பில் இலங்கை அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வல்ஷூடன் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் பதிவிட்டுள்ள ருவிற்றர் பதிவில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கனடாவின் ஒன்ராறியோ மாநிலத்தில் வாழும் புலம்பெயர் தமிழர்களால் மே மாதத்தில் 11ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரையான காலப்பகுதி 'இனப்படுகொலை அறிவூட்டல்' வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வாரத்தில் ஒன்ரோறியோ மாநிலத்தில் வாழும் மக்கள் மத்தியில் இலங்கையில் இலங்கை அரசாங்கத்தால் நிகழ்த்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பில் தெளிவூட்டல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ச-6)

## 'மொட்டு'க் கட்சியே இன்னமும் ஆட்சி

### மஹிந்த புகழ்ச்சி

கொழும்பு, ஏப். 10
மொட்டுக் கட்சியின் ஆட்சியை எவராலும் அசைக்கமுடியாது. 'மொட்டு' ஆட்சியே இன்னமும் தொடர்கின்றது.

இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

'மொட்டு'வின் ஆட்சியில் ஜனாதிபதியும், பிரதமரும்தான் பதவி விலகினார்கள். ஆனால், புதிய ஜனாதிபதி, புதிய பிரதமருடன் 'மொட்டு' ஆட்சி இன்னமும் தொடர்கின்றது. ரணில் விக்கிரமசிங்க, தினேஷ் குணவர்த்தன ஆகிய இருவரும் எனது சிறந்த நண்பர்கள். ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகிக்கும் அவர்களுக்கு எமது கட்சியின் ஆதரவு தொடர்ந்தும் இருக்கும். இந்த ஆட்சியை எவராலும் அசைக்க முடியாது. ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஒருபோதும் இடமில்லை - என்றார். (ச-22)

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கைக்கு ஆதரவு வழங்குங்கள்!

### நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைமை அதிகாரி அழைப்பு

**கொழும்பு, ஏப்.10**
**இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்து நிலையான மீட்சியை ஊக்குவிக்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைமை அதிகாரி பீற்றர் புரூவர் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கொள்கை தவறுகளுக்குப் பின்னர் இலங்கை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பான அர்ப்பணிப்புடன் உள்ளது. சர்வதேச நாணயநிதியம் உதவுவதற்கே வந்துள்ளது.

இலங்கைக்கு மிகவும் தேவையான தருணத்தில் அடுத்த நான்கு வருடத்துக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலரை வழங்க சர்வதேச நாணய நிதியம் முன்வந்துள்ளது. 2019ஆம் ஆண்டு முதல் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அளவு வரி விலக்களிப்பும் எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தங்களில் காணப்பட்ட தாமதங்களும் இலங்கை அதிகளவு கடன், குறைந்தளவு அந்நியச் செலாவணிக் கையிருப்புடன் கொரோனாப் பெருந்தொற்று காலத்துக்குள் நுழையவேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

அந்நியச் செலாவணி கையிருப்பில் இல்லாததால் மின், உணவு, மருந்து, அத்தியாவசியப் பொருள்கள் போன்றவற்றுக்கான தட்டுப்பாடு உருவானது, நீண்ட பெற்றோல் வரிசைகள் உருவாகின.

இலங்கை தனது வரலாற்றில் முதல்தடவையாக தனது கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டது. இதற்கான சுலபமான தீர்வுகள் இல்லை. இந்தப் பெரும் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

இலங்கை இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேவேளை நலிவடைந்த நிலையில் உள்ள மக்களுக்கு ஆதரவளிக்கவேண்டும். அப்போதே இலங்கை மீண்டும் வலுவான வளர்ச்சிப் பாதையில் பயணிக்கமுடியும் - என்றார். (எ)

## வியாபார நடவடிக்கையில் விசேட கண்காணிப்புகள்!

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இந்த மாதம் முழுவதும் விசேட கண்காணிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் மற்றும் நிறுத்தல் அளவைத் திணைக்களத்தின் மாவட்ட முகாமையாளர்களை இணைத்து இந்த வேலைத்திட்டம் இடம்பெறவுள்ளது.

பொருள்களின் விலை குறிப்பிடப்படாமை, அதிக விலைக்கு விற்பனை, காலாவதியான பொருள்கள் விற்பனை உள்ளிட்ட குற்றங்கள் தொடர்பில் விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. பண்டிகைக் காலத்தில் சட்டவிரோதச் செயற்பாடுகளை தவிர்ப்பதற்காக விசேட கண்காணிப்பும் முன்னெடுக்கப்படும் - என்றார். (ச-22)

## ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படவில்லை!

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மறுப்பு

கொழும்பு, ஏப். 10
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என வெளியான செய்தி பொய்யானது என பெற்றோலியக் கூட்டுத்தானம் தெளிவுபடுத்தியுள்ளது.

புத்தாண்டை முன்னிட்டு பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு முற்பணக் கடன்கள் வழமைபோன்று வழங்கப்படுகின்றன. ஆயினும் இந்த வருடம் எவருக்கும் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

எழுத்துமூர்வ கோரிக்கை விடுத்த ஊழியர்களுக்கு மாத்திரம் 10 மாதக் காலத்துக்குள் மாதச் சம்பளத்தில் வசூலிக்கப்படும் நிபந்தனையின் அடிப்படையில் 30 ஆயிரம் ரூபா பண்டிகை முற்பணம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய போலிச் செய்திகளை வெளியிடுவது பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்பில் பொதுமக்களை தவறாக வழிநடத்தும். இந்த விடயம் கண்டிக்கத்தக்கது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படையைக் குற்றஞ்சாட்டுவதை நிறுத்தி தமிழக மீனவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள்

## தமிழக முதல்வரிடம் ஆலம் கோரிக்கை

**மன்னார், ஏப். 10**

**இலங்கைக் கடற்படையினரைக் குற்றஞ்சாட்டுவதை நிறுத்தி இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் என்று மன்னார் மாவட்ட மீனவக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளரும் வடமாகாண கடற்றொழிலாளர்கள் இணையத்தின் ஊடகப் பேச்சாளருமான என்.எம்.ஆலம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த சில தினங்களாக இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களைத் தாக்கி வருவதாகவும் அச்சுறுத்துவதாகவும் இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்தியப் பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதியுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறியக்கூடியதாகவுள்ளது.

தமிழக மீனவர்கள் எமது கரையோரம் வரை ஆயிரக்கணக்கான படகுகளில் உள்நுழைந்து கடல் சூழலுக்கு அழிவைத் தருகின்ற தொழில்முறைகளைச் செய்துவருகின்றனர். இலங்கைக் கடல் எல்லையைப் பாதுகாப்பது கடற்படையினரின் கடமையாகும்.

இந்தக் கடமையை தமிழக முதலமைச்சர் செய்யவேண்டாமெனக் கூறுகின்றாரா? அல்லது எல்லை தாண்டும் தமிழக மீனவர்களை விரட்டாது கைதுசெய்யுமாறு வலியுறுத்துகின்றாரா? இலங்கைக் கடற்படையினரைக் குற்றஞ்சாட்டுவதை நிறுத்தி இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் தமிழக மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (எ-14, 213)

## பயணச் சீட்டின்றிப் பயணிக்கும்

# ரயில் பயணிகளுக்கு அபராதம் இருமடங்கு

கொழும்பு, ஏப். 10

ரயிலில் பயணச்சீட்டின்றிப் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளது. அதனால் பயணச்சீட்டின்றி பயணிக்கும் பயணிகளிடமிருந்து அறவிடப்படும் அபராதத் தொகையை உயர்த்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் ரயில்வே திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:-

பேருந்து கட்டணத்தைவிட ரயில் சேவையில் குறைவான கட்டணமே வசூலிக்கப்படுகிறது. ஆயினும் பயணச்சீட்டின்றி பயணிகள் பயணிப்பதால் திணைக்களத்தின் வருமானம் மேலும் வீழ்ச்சியடைகிறது.

இந்த நிலையில் பயணச்சீட்டின்றிப் பயணிக்கும் பயணிகளிடமிருந்து இருமடங்கு பயணச்சீட்டுக் கட்டணத்தையும் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாவரை அபராதத் தொகையையும் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

# டொலரை ரூபாவாக்கும் நடைமுறை நிறுத்தம்!

கொழும்பு, ஏப். 10

வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் ஏற்றுமதி வருமானம் பெறுபவர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகை டொலரை இலங்கை ரூபாவாக மாற்றவேண்டும் என விதிக்கப்பட்ட சட்டத்தை இந்த மாதம் முதல் இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் அனுப்பும் பணம், ஏற்றுமதி வருமானம் மற்றும் சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருமானம் ஆகியவற்றின் மூலம் பெறப்படும் அமெரிக்க டொலரின் தொகை அதிகரிப்பதைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களிடமிருந்து தற்போது பெறப்படும் வருமானத்தின் அளவு காரணமாக ஏற்றுமதி வருமானத்தின் ஒருபகுதியை இலங்கை ரூபாவாக மாற்ற வேண்டிய அவசியமில்லை என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். (ச-இ)

# புதிய வரிக்கொள்கைக்கு எதிராக மீளவும் வெடிக்கவுள்ள போராட்டம்

கொழும்பு, ஏப். 10

புதிய வரிக்கொள்கை தொடர்பில் அரசாங்கம் இதுவரை நிரந்தரமான தீர்வு எதையும் முன்வைக்கவில்லை. இதற்கெதிராக அடுத்த வாரம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் என ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் அரசாங்கத்தால் புதிய வரித் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் இந்த வரிக் கொள்கையை மீளப்பெறவேண்டும் என்று வலியுறுத்தி பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்தன. ஆயினும் நிரந்தரமான தீர்வு - உரிய நிவாரணம் எதனையும் அரசாங்கம் வழங்கவில்லை.

இந்த நிலையிலேயே அடுத்த கட்டமாக எதிர்வரும் நாள்களில் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் சங்க சம்மேளனம், தொழிலாளர்கள் போராட்ட மத்திய நிலையம், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம், அகில இலங்கை முகாமைத்துவ அதிகாரிகள் சங்கம், தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்பு மத்திய நிலையம், தொழிற்சங்க கூட்டமைப்பு, இலங்கை மின்சாரசபை ஒருங்கிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு உள்ளிட்டவை இந்த தொழிற்சங்க நடவடிக்கையில் இணையவுள்ளன.

முன்னெடுக்கப்படவுள்ள தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக இன்று திங்கட்கிழமை கூடி தீர்மானிக்கவுள்ளோம் என்று ஒன்றிணைந்த தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ச-இ)




இப்ப சிறுவர் இல்லங்களில நடக்குறதுகளைப் பாக்கேக்க இதுகள் சிறுவர் இல்லமா இல்லாட்டி சித்திரவதை இல்லமா? எண்டுதான் யோசிக்க வேண்டியிருக்கு. அந்தளவுக்கு அங்க நடக்கிற அநியாயங்கள் இருக்குது. சிறுவர் இல்லங்களைத் தொடங்கிறதெண்டால் அதுக்கு கன ரூல்ஸ் இருக்குது. முக்கியமா உந்த விசயத்துக்குப் பொறுப்பான சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தின்ர பெர்மிசன் எடுக்கவேணும். ஆனால், இருபாலையில இயங்கின கானான் சிறுவர் இல்லத்துக்கு அந்தத்திணைக்களத்தின்ர அனுமதி எடுக்கேலை. ஆனால், வடக்கு மாகாணக் கல்வியமைச்சுக்கு இப்பிடி ஒரு மாணவர் விடுதி அமைக்கப்போறம் எண்டு கடிதம் எழுதி, அவையின்ர பெர்மிசன் எடுத்திருக்கினம்.

ஒரு சிறுவர் விடுதிக்கு கல்வியமைச்சு அனுமதி குடுக்கலாமா எண்டு கேட்டால், பதில் 'குடுக்கலாம் ஆனால் அதுக்குச் சில நிபந்தனைபள் இருக்கு. அதாவது ஒரு பள்ளிக்கூடத்தில தூர இடத்துப் பிள்ளையள் தங்கி நிண்டு படிக்க, அந்தப் பள்ளிக்கூட வளாகத்துக்க ஒரு மாணவர் விடுதி அமைக்கிறதெண்டால் கல்வியமைச்சின்ர அனுமதி எடுத்தால் சரி. ஆனாலும் சிறுவர் நன்னடத்தைப் பிரிவுக்கும் அறிவிக்கோணும் எண்டு விசயம் தெரிஞ்ச ஆக்கள் சொல்லுகினம்.

உந்த இருபாலை சிறுவர் இல்லம் இயங்கினது பள்ளிக்கூடக் காணிக்குள்ள இல்லை. அது அந்தச் சபையின்ர 'சேர்ச்' இருக்கிற காணிக்குள்ள தான் இயங்கியிருக்கு. அப்பிடியெண்டால் கட்டாயம் சிறுவர் நன்னடத்தைப் பிரிவின்ர அனுமதி தேவை. ஆனால், ஏதோ மேல்மட்டத்துணையால அப்பிடியெல்லாம் பதியாமல், கல்வியமைச்சின்ர அனுமதியை மட்டும் வைச்சுக்கொண்டு இவ்வளவுநாளும் இல்லத்தைக் கொண்டு நடத்தியிருக்கினம்.

இதில இன்னொரு பகிடி என்னெண்டால், இப்பிடி ஒரு சிறுவர் இல்லம் இவ்வளவு வருசமா இயங்கிறது. அந்தச் சிறுவர் இல்லத்தைக் கண்காணிக்கவேண்டிய திணைக்களத்துக்கு இப்பதான் தெரியவந்திருக்காம். அந்தளவுக்கு நசுக்கிடாமல் உந்த இல்லத்தை நடத்தியிருக்கினம். சரி, பள்ளிக்கூடத்தில நடத்தாமல் இப்பிடி சேர்ச்சில சிறுவர் இல்லத்தை சட்டவிரோதமா நடத்தக் கூடாது அதுக்கு அனுமதி வழங்கின அப்போதைய கல்வியமைச்சருக்குத் தெரியாதோ? எல்லாம் அவருக்கும் தெரியும். அப்பிடியிருந்தும் ஏன் அனுமதி குடுத்தார் எண்ட கேள்வி உங்கட மண்டைக்குள்ள ஓடுதெல்லோ.

எல்லாம் தான் ஆடாட்டியும் மதம் ஆடும் எண்ட விதிதான். நீங்க நினைச்சது சரிதான், உந்த இல்லத்துக்கு அனுமதி குடுத்த மாகாண அமைச்சரும் உந்த இல்லத்தை நடத்தின அதே சபையைச் சேர்ந்த வர்தான். அப்ப அவர் குடுக்காட்டி தெய்வக்குற்றமாகிடுமெல்லோ. அதுதான் குடுத்திருக்கிறார் போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயம் தனியார் மயமாக்கப்பட்டால் மீளவும் போருக்கு மக்கள் தள்ளப்படுவர்

## இரணைமடு விவசாய சம்மேளன செயலாளர் எச்சரிக்கை

கிளிநொச்சி, ஏப்.10

தனியார் நிறுவனங்களினூடாக விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமானால் மீளவும் சுதந்திரப் போர் ஒன்றில் ஈடுபடுமளவுக்கு மக்கள் தள்ளப்படலாம்- இவ்வாறு இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காலபோகத்துக்கான உள்ளீடு விடயங்களை தனியார் மயமாக்கி அவர்கள் ஊடாகவே விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகள் உள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான சூழலில் தற்போது தனியார் நிறுவனங்களிடம் எங்களுடைய அனைத்துப் பொறுப்புக்களையும் அரசு ஒப்படைக்குமாக இருந்தால், உள்ளீடுகளை மட்டுமல்ல எங்களுடைய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதைக்கூட அவர்களே தீர்மானிப்பார்கள்.

அதுமாத்திரமன்றி, இந்த நாட்டில் எவ்வளவு உற்பத்தி விளையவேண்டும் என்பதையும், உற்பத்தியின் விலையையும், உற்பத்தியானது நுகர்வோர் சந்தைக்கு செல்வதையும் இதே தனியார் தான் நிர்ணயிக்கப்போகின்றார்கள்.

இவ்வாறு அனைத்தையும் தனியாரே நிர்ணயிப்பார்களாக இருந்தால், எதிர்காலத்தில் எமது காணிகளும் தனியார் நிறுவனங்களிடமே சென்றடையும் சூழல் உருவாகும், விவசாயம் மாத்திரமல்ல. பல்துறை சார்ந்த தனியார் மயமாக்கல் மூலம் மொத்த நாடுமே தனியார் நிறுவனங்களுக்குள் அல்லது சர்வதேச நிறுவனங்களுக்குள் அடிமையாகிவிடும்.

இந்த தனியார்மயமாக்கலை அரசும், அரசு சார்ந்த அதிகாரிகளும், துறைசார் நிபுணர்கள், அரசியல்வாதிகள் அனைவரும் ஆழமாகச் சிந்தித்தே செயற்படுத்தவேண்டும்- என்றார். (எ-14,113)

# பேரினவாதம் எதைச் செய்தாலும் ரணில் மௌனமாகவே இருப்பார்

## சிறீதரன் எம்.பி. சாடல்



**கிளிநொச்சி, ஏப். 10**

**சிங்கள - பௌத்த பேரினவாதம் எதைச் செய்தாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மௌனமாகவே இருப்பார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாரும் விக்கிரகங்களை வலுக்கட்டாயமாக வைக்க முடியாது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இவ்வாறு கூறுகின்ற ஜனாதிபதி ஏற்கனவே பாரம்பரியமாக வழிபட்டு வந்த விக்கிரகங்களை உடைப்பதற்கான அனுமதிகளைக் கொடுக்கின்றார். முக்கியமாக குருந்தூர் மலையிலே நீதிமன்றம் வழங்கிய கட்டளையை மீறி விகாரை அமைக்கப்படுகின்றது. வெடுக்குநாறிமலையிலே விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தமிழர் வழிபாட்டிடங்களில் விகாரை அமைப்பதற்கு அவர் அனுமதித்துள்ளார்.

சிங்கள - பௌத்த பேரினவாதம் எதைச் செய்தாலும் அவர் மௌனமாக இருப்பார்.

ஆனால், தமிழர்கள் அவ்வாறு செய்தால் அது வலுக்கட்டாயம் என்றும் தடுத்து வருகின்றனர்.

எமது அடையாளங்களை நாங்கள் பேணவேண்டும் என்பது எமக்கு முன்னால் உள்ள வரலாற்று ரீதியான கடமையாகும். தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. ஒன்றுகூடுவதோ அல்லது உரிமைகள் பற்றிப் பேசுவதற்கோ முடியாது.

இவ்வாறு பெரும் நெருக்கடிகளைத் தோற்றுவித்து மக்களை ஒரு நெருக்கடி நிலைக்குள் தள்ளி கொடுங்கோல் ஆட்சியை மேற்கொள்ளவே இந்த அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது- என்றார். (எ-14,113)

# ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஏப். 10

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநகரி - பள்ளிக்குடாப்பகுதியில் 213 கிராம் ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-14,113)

# அரசியல் உரிமைகளைக்கூட ஏ.ரி.ஏ. சட்டம் பறித்தெடுக்கும்

## கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப்.10

அரசியலமைப்பில் உள்ள மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் உரிமைகளைக்கூட ஏ.ரி.ஏ. சட்டம் பறித்தெடுப்பதற்கான உள்நோக்கங்களைக் கொண்டிருக்கின்றது என்று கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் செயலாளர் எஸ். ஜீவநாயகம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த மார்ச் மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு, அரசாங்கத்துக்கு எதிரான மாற்றுக்கருத்துக்களை முன்வைக்கின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துகின்ற அல்லது இல்லாதொழிக்கின்ற சர்வாதிகாரத்தை நிலைநிறுத்துகின்ற சட்டமாகவே காணப்படுகின்றது.

புதிதாக ஏ.ரி.ஏ. என்ற புதிய சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வருவதற்காக முயற்சிக்கின்றது. இது நாட்டினுடைய ஜனநாயகத்துக்கு விழுந்த ஒரு பெரிய அடியாகவே பார்க்கின்றோம்.

கருத்துச் சுதந்திரம், ஊடக சுதந்திரம், மனித உரிமை செயற்பாடுகள் உள்ளிட்ட எல்லாவற்றையும் அராஜக காட்டுச் சட்டங்களைக்கொண்டு நிர்வகிக்கின்ற மாதிரியான கட்டமைப்பை இந்த புதிய அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இந்தச் சட்டம் எந்த வகையிலும், நாட்டு மக்களின் நலனையோ, உரிமை சார்ந்த விடயங்களையோ பாதுகாக்காது.

ஏ.ரி.ஏ. எனும் பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்திலும்கூட முப்படையினருக்கு கைது செய்யவும், 24 மணிநேரத்துக்கு தடுத்து வைக்கவும் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன.

மட்டுப்படுத்தப்பட்ட அரசியல் உரிமைகளைக்கூட ஏ.ரி.ஏ. சட்டம் பறித்தெடுப்பதற்கான உள்நோக்கங்களைக் கொண்டிருக்கின்றது. இது ஒட்டுமொத்த நாட்டினுடைய ஜனநாயகத்தையும், மனித உரிமைக் குரலையும், ஊடகக் குரலையும் முடக்கும் சட்டமாகவே நாங்கள் பார்க்கின்றோம்- என்றார். (எ-14,113)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண் டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிறுசிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத்துணையிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். சகோதரர்களால் அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கு வாய்ப்பு உள்ளது. மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. திடீர் செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். பிணக்குகள் நீங்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். மகிழ்ச்சி அடைவீர்கள். உறவுகள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும். பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். நண்பர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## சொல்லை விட செயலே சிறந்தது

வடக்கில் அனைத்து இன மக்களுக்கும் வழிபாட்டு உரிமையுண்டு. ஆனால், அந்த உரிமையைப் பயன்படுத்தி அத்துமீறி வழிபடவோ அல்லது வழிபாட்டுச் சின்னங்களை வைக்கவோ முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கடந்த சில மாதங்களாகவே மதங்களை மையப்படுத்திய பதற்றநிலை வடக்கில் பரவலாக உணரப்படுகின்றது. மத அடக்குமுறைகளுக்கும் மத அழிப்புக்கும் நீதிகோரி, போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் பரவலாக இடம்பெற்றுவரும் பின்னணியில்தான் ஜனாதிபதி ரணில் இது விடயத்தில் தனது நிலைப்பாட்டை இவ்வாறு கட்டியம் செய்திருக்கின்றார். ஓர் இடத்தில் தீ பரவும்போது தான் அது விரைந்து கட்டுக்குள் கொண்டுவரப்பட வேண்டுமே அன்றி, தீ தன் பரவுகையை முற்றாக வெளிப்படுத்தி பேரழிவுகளை ஏற்படுத்திய பின்னர் இழப்புக்களை எண்ணிப்பார்ப்பது காத்திரமான நடவடிக்கையாக இருக்காது. ஆனால், தீயைக் கட்டுப்படுத்தாமல், அது பரவிய பின்னர் அதனால் ஏற்பட்ட இழப்புக்களை எண்ணிப்பார்க்கும் கைங்கரியத்தை ஆற்றுவதற்குத்தான் ஜனாதிபதி ரணில் எத்தனித்திருக்கின்றார்.

குருந்தூர்மலையில் இந்து மதத்தின் தொன்மைக்குச் சவால்விடும் வகையில் பௌத்த கட்டுமானங்கள் அமைக்க மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புக்களும், வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களும் நேற்றோ அல்லது இன்றோ நடப்பவை அல்ல. இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்பதற்கு முன்பிருந்தே இந்தத் தீவில் முளைவிட்டிருந்த இனவாதச் சகதி அது. ஆனால், இந்தப் பிரச்சினைகளுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக – நாட்டின் முதன்மை அதிகாரப்பீடமாக ரணில் என்ன தீர்வை வழங்கினார்? என்று கேட்டால், பதில் 'பல்லிளிக்கும்'. குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் பௌத்த கட்டுமானங்கள் தற்போது முழுமை பெற்றிருக்கின்றன. வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அடியோடு பெயர்த்தழிக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் நடத்துமுடிந்த பின்னர், அதாவது சிங்கள– பௌத்த பேரினவாதம், தன் இரையை முழுவதுமாக உட்கொண்ட பின்னர், இப்போது வந்துநின்று, 'வடக்கில் அனைத்து இன மக்களுக்கும் வழிபாட்டு உரிமையுண்டு. ஆனால், அந்த உரிமையைப் பயன்படுத்தி அத்துமீறி வழிபடவோ அல்லது வழிபாட்டுச் சின்னங்களை வைக்கவோ முடியாது' என்று தெரிவிப்பதென்பது, நீலிக்கண்ணீர் வடிக்கும் செயலே அன்றி வேறென்ன?

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸ போட்டியிட்டார். சஜித் தனிவழி சென்றுவிட்டாலும், ரணில் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இப்போதும் உள்ளார். அந்தக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு – கிழக்கில் ஆயிரம் விகாரைகளை அமைப்பது என்ற திட்டமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. ரணில் அனைத்து மதங்களையும் மதிக்கின்ற ஒரு தலைரென்றால், இந்த அம்சமே அந்த விஞ்ஞாபனத்தில் இருந்திருக்காதே. ஆயிரம் விகாரைகளைத் தமிழர் தேசத்தில் அமைப்பதற்கான தேவை என்ன? இது அப்பட்டமான மதத் திணிப்பு. இந்த மனோநிலையின் அடுத்தகட்ட வக்கிரமான நிலைப்பாடாகவே நீதிமன்ற உத்தரவை மீறிய பௌத்த கட்டுமானங்களையும் வெடுக்குநாறிமலை ஆலய அழிப்பையும் கொள்ள வேண்டியிருக்கின்றது.

உண்மையில் இனங்களுக்கும் மதங்களுக்கும் அப்பாற்பட்ட தலைவராக தன்னை நிலைப்படுத்த ரணில் விரும்புகின்றாரெனில், அவர் குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறிய வகையில் அமைக்கப்பட்ட பௌத்த கட்டுமானத்தை அகற்ற வேண்டும். வெடுக்குநாறிமலையில் ஆதிலிங்கத்தின் மீது கைவைத்தவர்களைத் தண்டிப்பதுடன் அந்த ஆதிலிங்கத்தை போர்க்கால அடிப்படையில் மீளமைக்க வேண்டும். அதையெல்லாம் செய்யாமல் , வெறுமனே வாய்ப்பந்தல் போடுவதால் எந்த நல்லிணக்கமும் நாட்டில் ஏற்படப்போவதில்லை. சொல்லை விட செயலே சிறந்த ஆயுதம்.

### நாளொரு நல்வார்த்தை

நேற்றிலிருந்து கற்றுக்கொள்
இன்றைக்காக வாழ்
நாளை மீது நம்பிக்கை வை
கேள்விகளை நிறுத்தாதே

– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்




வெளிநாட்டு நிறுவனங்களுக்கு

# குறைந்த விலையில் எரிபொருள் விற்பதற்கு அரசாங்கம் அனுமதி!

## எரிசக்தி அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 10**

**இலங்கையின் சில்லறை எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிக்கும் மூன்று வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்களுக்கு விற்பனை விலையைவிடக் குறைவான விலைக்கு எரிபொருளை விற்க அரசாங்கம் அனுமதித்துள்ளது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுடனான ஒப்பந்தம் இந்த மாத இறுதியில் முடிவுறுத்தப்பட்டு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

தற்போது அரசாங்கம் சராசரியாக மாதமொன்றுக்கு 450 மில்லியன் அமெரிக்க டொலர்களை எரிபொருளுக்காகச் செலவழித்து வருகிறது. குறித்த மூன்று நிறுவனங்களும் மாதாந்தம் சராசரியாக 120 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருளையும் வருடாந்தம் 2.2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருளையும் ஏற்றுமதி செய்யும்.

இந்த நடவடிக்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால், வாடிக்கையாளர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அதேவேளை திறைசேரியின் சுமையைக் குறைக்கும் - என்றார். (ச-இ)

# தலைமையைக் காக்க கட்சிகள் பிரயத்தனம்!

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 10

கட்சித் தாவல்களால் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது. நாட்டுக்குத் தற்போது தேவையாகவுள்ள ஸ்திரமான அரசியல் கொள்கை இவர்களிடம் இல்லை. மாறாக ஒருவரையொருவர் பாதுகாப்பதே இவர்களின் நோக்கமாக - இலக்காக காணப்படுகிறது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்களிடத்தே, 20 கோடி ரூபாவுக்கான பேரம் பேசல் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகிறது என சஜித் பிரேமதாஸ கவலை கொள்வது வெட்கக்கேடானது. கட்சித் தலைமைத்துவம் தொடர்பாகவே இங்கு கவனம் செலுத்தப்படுகின்றது. கட்சித் தாவல்களால் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.


அரச சொத்துக்களை கொள்ளையிட்டவர்களைப் பாதுகாக்கவே இவர்கள் கூட்டாகச் செயற்படுகிறார்கள்- என்றார். (ச-இ)

**நாளை** 11.04.2023 செவ்வாய்க்கிழமை பங்குனி 28

சுபநேரம் : 10.36 - 12.06
ராகுகாலம் : 03.06 - 04.36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ அருணன் (மட்டுவில்)





இன்று மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் பங்குனித்திங்கள் உற்சவத்தை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

# நல்வரங்கள் தந்தருளும் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்

ஈழவள நாட்டிலுள்ள பல ஆலயங்களுள் பழமையும் புதுமையும் தெய்வீக சக்தி நிறைந்ததுமான சக்தி ஆலயமாக விளங்கி அருளை வாரி வழங்கும் அற்புத அன்னையாக மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை ஆலயம் விளங்குகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் புண்ணிய பூமியாகிய மட்டுவில் பதியில் இந்த மகா சக்தி ஆலயம் அமைந்துள்ளது. சாவகச்சேரியிலிருந்து புத்தூர் செல்லும் வீதியில் ஐந்து சந்தியைக் கொண்டுள்ள கனகன் புளியடிச் சந்தியிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் அம்பாள் ஆலயம் அமைந்துள்ளது. வயலும் வயல் சார்ந்த பகுதியில் - குறிப்பாக தென்மராட்சிப் பகுதியின் மேற்குப் பகுதியில் ஒரு காவல் தெய்வமாக அம்பாள் வீற்றிருக்கின்றாள்.

அன்னையின் அருளாட்சியே இந்தப் பிரபஞ்சத்தை இயக்கிக் கொண்டிருக்கிறது. சிறிய ஆலயமாக உருவாகி தற்பொழுது பெரும் ஆலயமாக வளர்ச்சி கண்டுள்ளது. ஆலயத்தைச் சூழ மருத மரங்கள், புளியமரங்கள் என்பன பெருவிருட்சங்களாக வளர்ந்து நிழல் பரப்பி வருகின்றன.

தென்மராட்சியின் பெரும்பகுதி, மட்டுவில் வடக்காகவே உள்ளது. சைவ மணம் கமழும் மட்டுவில் பிரதேசத்தில் கண்ணகை அம்பாள் ஆலயம் தொன்மை வாய்ந்தது. இந்த ஆலயம் பல நூற்றாண்டு பழமை வாய்ந்தது. பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது.

சுமார் 1750 (கி.பி.) இந்த ஆலயம் வைரமான கற்கள் கொண்டு நாகர் - கதிர்காமர் என்பவரால் கட்டப்பட்டது என அறியமுடிகிறது.சைவமக்கள் குறிப்பாக ஈழ மணித் திருநாட்டின் பக்தர்கள் இவ்வாலயத்தை தங்களின் புண்ணிய வழிபாட்டிடமாகக் கொண்டுள்ளனர். இந்த அம்பாளின் மிக முக்கியமான உற்சவம் பங்குனித் திங்கள் உற்சவமாகும். பக்தர்கள் தமக்கு கொடிய நோய்கள், துன்பங்கள் அணுகாவண்ணம் அம்பாளுக்கு பொங்கிப் படைப்பார்கள். அந்தப் பொங்கலை ஏனையவர்களுக்கும் வழங்கி , அந்த அம்பாளே நேரில் வந்து தங்கள் பிரசாதத்தை உண்டதைப் போல மகிழ்வார்கள். மட்டுவிலுக்கு சந்திரபுரம் என்னும் ஒரு பெயர் உண்டு. அதை திங்கள் ஊர் என்றும் சொல்லுவார்கள். பன்றித் தலைச்சி கண்ணகைக்கு தினமும் ஆறுகாலப் பூசைகள் நிகழ்கின்றன. திங்கள் என்றால் குளிர்மையானது என்பார்கள். அதுபோல அன்னையும் ஒரு குளிர்ந்த கருணைத் தெய்வமே. அன்னையைத் தொடர்ந்து வழிபடுபவர்களுக்கு அவளின் கருணையின் பெருமை தெரியும். அவள் செய்யும் புதுமை , அம்மனிடம் நான்கு திங்கள் சென்று வழிபட்டால் அவர்களுக்கு ஏதோ ஒரு நன்மையான காரியம் நடந்தே தீரும். நம்பியோரைக் கைவிடமாட்டாள் அன்னை.

தைப்பொங்கல் தினத்தன்று மட்டுவில் வயலில் அம்மன் சென்று கதிர் எடுக்கும் நிகழ்வு வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

### நீராடுதல்

அம்பாள் ஆலயத்தில் தெற்கு வீதியில் பெரும் திருக்கேணி அமைந்துள்ளது. அந்த கேணித் தீர்த்தம் அற்புதங்கள் நிறைந்தது. தன்னிடம் வருபவர்களின், பிணிகளை, துன்பங்களை போக்கி நல்வாழ்வை வழங்கிடும் தன்மை கொண்டது. எனவே அம்பாளிடம் வருபவர்கள் ஒரு குடம் தண்ணீராவது தலையில் ஊற்றாது செல்ல மாட்டார்கள். அந்தத் திருக்கேணி நீரில் பொங்கல் செய்து அம்மனுக்கு ஆலய வாசலில் நிவேதித்து பலருக்கும் கொடுத்துச் செல்வார்கள். பன்றித்தலைச்சி அம்மனின் அற்புதங்கள் பல. தன்னை வழிபட்ட, தன்னை பூசித்த பக்தனுக்காக மாட்டுத் தலையை பன்றித் தலையாக மாற்றி அற்புதம் நிகழ்த்திய தாய் அவள். அதனாலேயே , பன்றித் தலைச்சி அம்மன் அன்று தொட்டு இப்பெயர் கொண்டு அன்னை அழைக்கப்பட்டு வருகிறாள்.

### ஏடு படித்தல்

சுமார் 30 வருடங்களுக்கு முன் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அம்பாளின் அடியார்களிடம் அம்பாளின் திருப்பாடல்கள் அடங்கிய ஏடு இருந்தது. அந்த அடியவர்கள் அம்மனின் திருவாசலில் நின்று அந்த ஏட்டில் உள்ள பாடல்களை மிருதங்கம், உடுக்கை, கைத்தாளம், ஆர்மோனியம் என்பவற்றை பக்க வாத்தியங்களாகக் கொண்டு பாடினார்கள்.

இந்தப்பாடல்களை மட்டுவில் வடக்கைச் சேர்ந்த அமரர்களான சமூகஜோதி சி.ஆறுமுகம், பூ.நாகலிங்கம், வே.இராசசிங்கம், சங்கீத பூசணம், வ.கந்தசாமி, வே. நாகமுத்து, பூ.கந்தையா ஆகியோர் அம்பாளிடம் மனம் நெகிழ பாடல்களைப் பாடி அருள் பெற்ற சம்பவங்கள் உண்டு. ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களும் இந்தப்பாடல்களை ஆலய வாசலில் இருந்து கேட்டு வீடு செல்வார்கள். பங்குனித் திங்களை விட மேலதிகமாக அம்மனுக்குன்கொடியேற்ற உற்சவம், மார்கழி மாதத்தில் திருவெம்பா வைக் காலத்தில் நடைபெறும்.

### கிராமம் சுத்தமாகும்

மட்டுவில் அம்பாள் உற்சவங்கள் ஆரம்பித்தால் மட்டுவில் பிரதேசம் உட்பட அயல் கிராமங்கள் எல்லாம் பக்தி பூர்வமான இடமாக மாற்றம் பெற்று வருவதைக் காணலாம். மக்களும் ஆசாரம் மிக்கவர்களாக மாறிவிடுவார்கள். அது மட்டுமல்லாமல் மட்டுவில் மக்கள் ஒன்று சேர்ந்து அம்பாளின் ஆலயச் சூழலை நாளாந்தம் துப்புரவு செய்வார்கள். அத்துடன் மேலும் பல தொண்டுகள் செய்து நிற்பார்கள்.

### நேர்த்திக் கடன்கள்

பங்குனித் திங்கள் உற்சவ காலத்தில் அடியவர்கள் பல நேர்த்திக் கடன்கள் செய்வார்கள். பாற் செம்பு எடுத்தல், கற்பூரச்சட்டி, கண்பானைகளில் கற்பூரம் எரித்தல், காவடி எடுத்தல், அர்ச்சனை செய்தல், தேவாரம் ஓதுதல் என்பவற்றைச் செய்வார்கள்.

கொடிய தொற்றுநோய்கள், பிரச்சினைகள், அன்னையின் பெயரைச் சொல்லவே அகன்றுவிடும். கண் நோய்கள் தீர்ந்துவிடும் - இவ்வாறு அம்பாளின் ஆனந்தங்கள் பல -
அன்னை ஏழைகளைக் கைவிடமாட்டாள் அவள். ஏழைகளின் தெய்வம்.
பன்றித் தலைச்சி என்றிட துன்புங்கள் விலகிவிடும்

தனந்தரும் கல்வி தரும் ஒரு
நாளும் தளர் வறியா
மனந் தரும் தெய்வ வடிவுந் தரும்
நெஞ்சில் வஞ்ச மில்லா
இனந் தரும் நல்லன எல்லாம்
தரும் அன்ப ரென்பவர்க்கே
கனந் தரும் பூங்குழலாள் அபிராமி
கடைக் கண்களே. ■

# நிதி நெருக்கடியில் சிக்கிய பெற்றோலிய நிறுவனங்கள்

கொழும்பு, ஏப். 10
சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவை தமது ஊழியர்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தாததன் விளைவாக தற்போது கடுமையான நிதி விளைவுகளை எதிர்கொள்கின்றன என்று கணக்காய்வாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது.
அந்த அறிக்கையில் உள்ளதாவது:
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த 2022 ஆம் ஆண்டு ஓகஸ்ட் இறுதியில் சுமார் ஆயிரத்து 51 பில்லியன் ரூபா திரட்டப்பட்ட இழப்பைப் பதிவு செய்தது. இந்த நிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் செலுத்தவேண்டிய மொத்த நிலுவைத் தொகை 2021 இல் 3.36 பில்லியன் ரூபாவாகவும், 2022 இல் 4.31 பில்லியன் ரூபாவாகவும் இருந்தது.
நிறுவனங்களால் குறிப்பிடத்தக்க கடன் திட்டம் பராமரிக்கப்பட்டு வந்தாலும், கடன் தொடர்பில் முறையான நிதிக் கொள்கை எதுவும் செயற்படுத்தப்படவில்லை. அத்துடன் ஊழியர்களின் அடிப்படை வருமானம், கடன் தவணை மற்றும் இதர செலவுகளுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தால் அவர்கள் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது. அதன்படி, கூட்டுத்தாபனத்தின் மொத்த ஊழியர்களில் 40 சதவீதத்துக்கும் மேலானவர்களும், ஸ்டோரேஜ் நிறுவனத்தின் மொத்த ஊழியர்களில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்களும் தங்களது அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்துக்கு மேல் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.
கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைப் பொருட்படுத்தாமல் பொருத்தமற்ற கடன் திட்டங்களைச் செயற்படுத்தியதன் விளைவாக, ஊழியர்கள் கடன் வாங்கத் தூண்டப்பட்டனர். இது நிறுவனங்களின் மேலதிக கொடுப்பனவுச் செலவுகளில் தேவையற்ற அதிகரிப்பை நேரடியாக ஏற்படுத்தியது.
பெற்றோலியக்கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் நிறுவனம் ஆகியவற்றில் 4 ,200 பணியாளர்கள் உள்ளனர். எனினும் இந்த நிறுவனங்களுக்கு 500 பேரின் தேவை மாத்திரமே உள்ளது.
இதற்கிடையில் சபுகஸ்கந்தயில் உள்ள பெற்றோலிய சுத்திகரிப்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவாக கடந்த 2021- 2022 இல் 3 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது- என்றுள்ளது. (எ-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி கௌரி கேதீஸ்வரநாதன்

**(அனலை வடலூர் அ.த.க.வித்தியாலய முன்னாள் ஆசிரியரும், அதிபரும்)**

அனலைதீவு 2 ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் நிரந்தர வாழ்விடமாகவும், Mississauga - Canada வை சிறிது கால வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கௌரி கேதீஸ்வரநாதன் அவர்கள் 09.04.2023 ஞாயிறு அதிகாலை அன்று அனலைதீவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்கள் செல்லத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், அமரர்கள் நடராஜா புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் கேதீஸ்வர நாதன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மனைவியும், பிரபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி சகிதா அவர்களின் அன்பு மாமியாரும், ஸ்ரீனிகா, ஹரினிஸா, அஸ்மிதா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், திருமதி கௌசலா அவர்களின் அன்பு சகோதரியும், அமரர் வைத்தீஸ்வரமூர்த்தி, இராஜேஸ்வரன், அமரர் நாகேஸ்வரன், திருமதி சுந்தரேஸ்வரி வெற்றிவேல், அமரர் ஞானேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், திரு. திருமதி உதயகுமாரன் இலக்கி னேஸ்வரி ஆகியோரின் சம்மந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.03.2023) புதன்கிழமை அன்று நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், சக உத்தியோகஸ்தர்கள் மற்றும் பழைய மாணவர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**+ 1 416 938 3768**
**+ 94 77412 9928**

தகவல்:
**மகன். பிரபா கேதீஸ்**

(CS 24395)(K-1)

# மரண அறிவித்தல்



## பரமேஸ்வரி மயில்வாகனம்

தையிட்டிப்புலம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட பரமேஸ்வரி மயில்வாகனம் அவர்கள் நேற்றுமுன்தினம் (08.04.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான விசுவநாதர் சின்னக்குட்டி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற விசுவநாதர் - மயில்வாகனம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கோபாலபிள்ளை, ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரியும், வசந்தன் (இந்தியா), காலஞ்சென்ற வசந்தா மற்றும் வசந்தசிவா (லண்டன்), வசந்தமாலா (பிரதம கணக்காளர் யாழ். மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சத்தீஸ்வரி (லண்டன்), மனோகரன் (தொழில் உத்தியோகத்தர் தொழில் உப அலுவலகம் - தொழிற்திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுபானு (லண்டன்), தருண் (லண்டன்), அரன் (மாணவன், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), ஆரணி (மாணவி, யா/ வேம்படி உயர் தரப் பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக முற்பகல் 10.00 மணியளவில் ஊற்றல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 24392)(K-1)

# REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
# INVITATION FOR BIDS (IFB)
## Procurement of Office Equipment

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, goods as specified following Table.
   a. Office Equipment

B. Bidding will be conducted through National Competitive Bidding Procedure

To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements.
   a. Bidders shall have valid business registration
   b. and business registration for supply of respective Supplies and Service

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Conduct No (021 2222278/4557 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days from 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of **a non-refundable fee as** specified in the table by cash on working days **from 10.04..2023 to 25.04.2023 during 09.00 Hours to 15.00 Hours.**

E. Bids shall be delivered to Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, No.572/3, Hospital Road, Jaffna on or before 10.30 a.mHours of **26.04.2023** Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of bidder's or their representatives who choose to attend.

F. Bid shall be valid for a remind 90 days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118 days from the bid opening.

G. Pre-bid Conference will be held at Conference Hall, Office of the Regional Director of Health Services, Jaffna **commencing at 10.00am on 20.04.2023**

H. Procurement committee will be the right to make final decision in regard the accept.

Table: I


| Reference No | Item | Qty | Non-refundable fees | Bid Security |
|---|---|---|---|---|
| NP/RDHS/PSSP/OE/2023/01 | Steel Cupboard | 26 | 3,000.00 | 68,000.00 |
| | Revolving Chair | 18 | | |
| | Conference Table | 02 | | |
| | Conference Chair | 35 | | |
| | Executive Table | 03 | | |
| | Front Glass Almeriah | 11 | | |
| | Filing Cabinet | 04 | | |
| | Wooden cupboard | 02 | | |
| | Silver Stainless Airport Chair (four Seat) | 02 | | |
| | Wooden Stool | 02 | | |

**Chairperson,**
**Regional Procurement Committee,**
**RDHS Office, Jaffna.**

(cr 39611) (N-1)

# மரண அறிவித்தல்

**மலர்வு**
**17 - 11 - 1939**



**உதிர்வு**
**09 - 04 - 2023**

## விசாகப்பெருமாள் சதானந்தன்

**(தனங்கிளப்பு வியாளவளவு வீரகத்திப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவும், தனங்கிளப்பு விவசாயச் சம்மேளன முன்னாள் தலைவரும்)**

தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட விசாகப்பெருமாள் சதானந்தன் அவர்கள் நேற்று (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசாகப்பெருமாள் விசாலாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திருமதி காமாட்சி தம்பிப்பிள்ளை, திருமதி மங்கையற்கரசி சிதம்பரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், குழந்தைவேலு கந்தசாமி, தம்பிப்பிள்ளை சிறிஸ்கந்தராஜா, ஜெயமனோகரி சுப்பிரமணியம், சிதம்பரப்பிள்ளை கஜேந்திரன், சிதம்பரப்பிள்ளை தயாபரன், சிதம்பரப்பிள்ளை விசாகேந்திரன், இந்துமதி தியாகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாய் மாமனாரும், காலஞ்சென்ற இராசையா செல்வநாயகம், இராசையா சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற இராசையா சண்முகசுந்தரம், திருமதி ஈஸ்வரி பாலசுப்பிர மணியம், இராசையா இளம்பிறைநாதன் (நாச்சிமார் Travels) ஆகியோரின் மைத்து னரும், சோமசுந்தரம் தர்மலிங்கம், நல்லம்மா சுப்பையா, பரமேஸ்வரி அழகரட்ணம், உமாமகேஸ்வரி நவரட்ணம், முருகேசு நடராசா ஆகியோரின் ஒன்று விட்ட சகோ தரரும், சரஸ்வதி சிவபாதம், கந்தையா கணேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் இன்று (10.04.2023) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தபாற்கந்தோர் வீதி,**
**சாவகச்சேரி.**

**077 639 0128**

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS 24396)(K-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 . 08 . 1943



மறைவு 08 . 04 . 2023

## கதிரவேலு கோணேஸ்வரி

வேலணை பெருங்குளம் முத்துமாரிஅம்மன் கோவில், 3 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்போது மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கோணேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (08.04.2023) இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான வே.பி.கந்தையா இலட்சுமிபிள்ளை தம்பதியினரின் மூத்தமகளும், காலஞ்சென்ற முருகேசு அன்னமுத்து தம்பதியினரின் மூத்தமருமகளும் காலஞ்சென்ற பாஸ்கரன்(சுவிற்சர்லாந்து) மற்றும் ஸ்ரீரஞ்சினி (மன்னார்), மனோரஞ்சன்(லண்டன்), ஸ்ரீகரன்(சுவிற்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ஸ்ரீதரன் (மன்னார்) மற்றும் சாங்கமித்தை(சுவிற்சர்லாந்து), பிரேமளா(லண்டன்), கல்பனா (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் , மகேஸ்வரி(இந்தியா), சண்முக ரத்திணம்(சுவிற்சர்லாந்து), தவமணி(கனடா) ,கமலாதேவி(கொழும்பு), சரவணநாதன் (கொழும்பு), சண்முகானந்தன் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யசிந்திரன், துவிகரன், கோபிகரன், சிந்துஜா, அனுசியா, தனுசிகா, அவினேஷன், திபியன், சயன் ஆகியோரின் பேர்த்தியும் ருவித், பமிதா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் பெரியகடை மன்னாரில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேலணை சாட்டி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
ஸ்ரீ.ஸ்ரீரஞ்சினி (மகள்)-071 655 0935
க.ஸ்ரீகரன்(மகன்)
க.சரவணநாதன்(தம்பி)-076 784 4515

(CS24400)(J-1)

# மரண அறிவித்தல்



## செல்லையாபிள்ளை மகேஸ்வரன்

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் புத்தளத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்லையாபிள்ளை மகேஸ்வரன் நேற்று (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.ஆ.செல்லையாபிள்ளை தங்கமுத்து தம்பதிகளின் இளையமகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவறோகினி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், மகேஸ்வரி, சண்முகராசா, சச்சிதானந்தம் மற்றும் கிருஸ்ணவேணி, நடேசன், வரதராசா ஆகியோரின் சகோதரனும் சஞ்சீவா, ஹரிகரன், கண்ணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது சகோதரரின் இல்லத்தில் (இல.06, சிவப்பிரகாசம் றோட், யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல.06, சிவப்பிரகாசம் றோட்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
075 731 6139

(CS24402)(J-1)

# பீமரத சாந்தி வாழ்த்து



உடுவில் மீனாட்சி
சோமசுந்தரேஸ்வர சுவாமி
தேவஸ்தான பிரதம குருவான
**ப்ரம்மஸ்ரீ**
**சி. பாலசுப்பிரமணியக்குருக்கள்**
**ஸ்ரீமதி பிரேமராணி தம்பதிகளின்**
பீமரத சாந்தி வைபவம் இன்று (10.04.2023) திங்கட்கிழமை எமது ஆலயத்தில் சிறப்புற நடைபெற அம்பாளினைப் பிரார்த்தித்து அவர்களின் ஆசிகளையும் வேண்டுகிறோம்.

அம்மன் கோவில்
உடுவில்.

வாழ்த்துவோர்:-
**பிள்ளைகள்**

(CS 24394)(K-1)

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14.03.1936

மறைவு 25.03.2019

## அமரர் செல்லையா இராசலிங்கம்

**திதி: அபரபக்ஷ பஞ்சமி**

ஆண்டுகள் நான்கு ஆனாலும் தந்தையே
உங்கள் அன்பின் அரவணைப்பு என்றும்
- எம் மனதை விட்டகலாது
எமது ஈர விழிநீரால் உங்கள் பாதமலர்
- இறைஞ்சுகின்றோம்
உங்கள் நிழல் என்றும் எம்மனதிலே நிலைதிருக்கும்

**ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!**

கல்வியங்காடு.

உங்கள் நினைவுகளோடு வாழும்..
குடும்பத்தினர்

(cs.24367 (N-1))

# மரண அறிவித்தல்

## கணேசபிள்ளை குலேந்திரகுமார் (குலம்)

தோற்றம் : 08.04.1964 | மறைவு : 09.04.2023



யாழ்ப்பாணம் மல்லாகத்தை பிறப்பிடமாகவும் திருகோணமலை உவர் மலையை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசபிள்ளை குலேந்திரகுமார் அவர்கள் நேற்று (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசபிள்ளை கணேஸ்வரியின் அன்பு மகனும், ஜெய வதனியின் அன்புக் கணவரும், சித்திவிநாயகம் ஜெயமலரின் அன்பு மருமகனும், தனுஷியா, தர்சன், உபஷியா, விதுஷன், ஜெயகௌசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகௌரி, ரமேஷ்குமார், சுபாஷினி, சுகந்தினி, காலஞ்சென்ற ஜெயந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மயூரன், ஆருதி, முகுந்தன், லக்ஷாயினி ஆகியோரின் மாமனாரும், அபிசாளினி, ஸ்ருதிகா, பிரணீத், கபிநயா, அவினேஷ், ஜிதேஷ் ஆகியேரின் அன்புப் பேரனும், குலபதி, வாசுகி, நாகேஸ்வரன், ஜெயசங்கர், காலஞ்சென்ற ஜெயபவானி ஜெயராஜ், ஜெயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2023) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மல்லாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 819 9373 ரமேஷ்குமார் (தம்பி)
0033 7514 68080 விதுஷன் (மகன்)

(CS24397)(J-1)

தகவல்:
குடும்பத்தினர்.

## மணவாளக்கோலம்

சாவகச்சேரி, ஏப்.10

மிருசுவில் - உசன் கஜகேணி விநாயகர் கோயில் மணவாளக்கோல சங்குமுழுக்கு இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ய-9)

## வர்த்தக சந்தை

கொடிகாமம், ஏப்.10

புத்தாண்டை முன்னிட்டு வடக்கு மாகாணத் தொழிற்றுறைத் திணைக்களம் மற்றும் யாழ். இந்திய துணைத் தூதரகம் இணைந்து நடத்தும் வடக்கு மாகாணத் தொழிற்றுறை வர்த்தக சந்தை இன்று திங்கட்கிழமை, நாளை செவ்வாய்க்கிழமை, நாளை மறுதினம் புதன்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணிவரை யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப். 10
சங்கானை குளத்தடி வீதி ஸ்ரீபேச்சியம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம்இன்றுதிங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகிஎதிர்வரும்20ஆம்திகதியுடன் நிறைவுபெறும் என ஆலயபரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ய-63)

## சீருடை 80 வீதம் விநியோகம்

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணிகள் 80 வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. மீதமுள்ள 20வீதம்இந்தமாதஇறுதிக்குள் விநியோகிக் கப்படும் எனவும் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-14,இ)

# அதிகரித்த விலைகளில் விற்கப்படும் பொருள்கள்

### நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

வவுனியா, ஏப். 10
வவுனியாவில்உள்ளபலவர்த்தகநிலையங்களில் பொருள்களின்விலைகள்குறைக்கப்படவில்லை என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டியுள் ளனர்.
நாட்டில்ஏற்பட்டபொருளாதாரநெருக்கடிகாரணமாக கடந்த காலங்களில் பொருள்களின் விலைகள் பலமடங்கு அதிகரித்துக் காணப்பட்டன. தற்போது உணவுப்பொருள்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களின் விலைகள் அண்மையில் குறைக்கப்பட் டன. இருந்தபோதும் வவுனியா மாவட்டத்தில் சில வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலை குறைக்கப்பட வில்லை.
அத்துடன் சதொச விற்பனை நிலையங்களிலும் பல பொருள்களைப் பெறமுடியாமல் உள்ளது என்று நுகர்வோர் சுட்டிக்காட்டியுள்ளனர்.
இதுதொடர்பில் நுகர்வோர் அதி காரசபை நடவடிக்கைஎடுக்கவேண்டும்எனக்கோரிக்கைவிடுத்துள்ளனர். (எ-14,110)



அனலைதீவு - பெரியபுலம் மஹாகணபதி கோயில் பெருந்திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று தேர்த்திருவிழா இடம்பெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-14,9)

### ஜனாதிபதியின்...

ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.
மதக்கும்பல் ஒன்றின் போதகர் தலைமையிலான குழு ஒன்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' பத்திரிகை தலைமையகத்துக்குள் புகுந்து அச்சுறுத்தும் வகையில் நேற்று செயற்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தநிலையில், இந்த் விடயம் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்துக்கு தெரியப்படுத்தப்பட்டதுடன், ஊடகங்களை அச்சுறுத்தும் இவ்வாறான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.
இந்தவிடயம் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படுமென்றும் ஜனாதிபதி செயலர் சமன் எக்கநாயக்கவால், 'உதயன்' நிர்வாக இயக்குநருக்கு தெரிவிக்கப்பட்டது. (அ)

### தமிழர்களின்...

முன்னெடுக்கப்பட்டுவரும் அரசாங்கத்தின் நெருக்கடிகள் மற்றும் பௌத்தமயமாக்கல் போன்ற செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் வவுனியாவிலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.
இதன்போது குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வினையாற்றுவதற்காக இரு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், வனவளத்திணைக்களத்தால் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை, தொல்பொருள்திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்து அவற்றை துல்லியமாக இனம் காண்பதற்காக 7 பேர் கொண்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. அத்துடன் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் சாத்வீகப்போராட்டத்தை முன்னெடுப்பதற்காக மற்றொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது.
இந்தக் கூட்டத்தில், ஒருசிலர் இந்துசமயம் மீது மாத்திரமே தற்போது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுவதாகவும், வெடுக்குநாறிமலையில் விக்கிரகங்கள் தாக்கப்பட்டபோது குரல்கொடுப்பவர்கள் திருக்கேதீச்சரத்தில் வளைவு உடைக்கப்பட்டபோது அமைதியாக இருந்ததாகவும் கருத்துக்களை முன்வைத்தனர். இதனால் சற்றுநேரம் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டு, பின்னர் சுமுகமானது. இதே வேளை குறித்த கலந்துரையாடலுக்கு வடக்கு - கிழக்கு சங்கநாயக்கரான விமலசார தேரரும் வருகை தந்திருந்தார்.
நீதிமன்றில் வழக்கு இருக்கும் நிலையில் குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறி மலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பாக அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த அவர், தமக்கே தெரியாமல் சில விடயங்கள் நடந்துவிடுவதாகவும், ஏற்கனவே இருந்த பழைய ஆலயங்கள் புதுப்பிக்கப்படாமல் அப்படியே பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.
இந்தக் கலந்துரையாடலில் மதகுருமார்கள், தமிழ் அரசுக் கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலைக் கழகம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசகட்சி, தமிழர் விடுதலைகூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சி, போன்ற அரசியல் கட்சிகளும், பொது அமைப்பினரும் கலந்துகொண்டனர். (அ-ஒ,110)

### நயினாதீவில்...

சூட்டப்பட்ட நிலையில் அங்கு புதிதாக நடப்பட்ட பெயர்ப்பலகையால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
"அதிமேதகு சங்கைக்குரிய பிரஹ்மன வத்தே தம்மகித்தி திஸ்ஸ பெரஹெர மாவத்தை' என வீதிக்கு மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அந்த வீதிக்கு தற்போது புதிய பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான ஒளிப்படம் சமூக வலைத்தளங்களில் நேற்றுப் பரவலாகப் பகிரப்பட்டது.
அதேபோன்று குறிகாட்டுவான் இறங்கு துறையிலிருந்து நயினாதீவு விகாரைக்குச் செல்லும் நயினாதீவு விகாராதிபதியின் படகில் பயணிப்பவர்களுக்கு நீண்டகாலமாக வழங்கப்பட்டு வரும் பயணச்சீட்டில் நாகதீப என்று குறிப்பிடப்பட்டுள்ள விடயமும் தற்போது சமூகவலைத்தளங்களில் பரவலாகப் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ,5)

### யாழ். பல்கலை...

யாழ். பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தில் கல்வி பயிலும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் 17 பேர் உயிர்கொல்லி போதைப்பொருளை வைத்திருந்த சந்தேகத்தில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுக்கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம், மணத்தறை வீதியிலுள்ள தனியார் விடுதியில் தங்கியிருந்து பல்கலைக்கழக மாணவர்கள் கற்று வருகின்றனர்.
பொலிஸாரால் கைது செய்யப்பட்ட உயிர்கொல்லி போதைப்பொருளை விற்பனை செய்யும் ஒருவர் வழங்கிய தகவல்களுக்கு அமைவாக நேற்று மதியம் மாணவர்கள் தங்கியிருந்த விடுதி சுற்றிவளைக்கப்பட்டது.
அங்கிருந்த 17 மாணவர்களின் (15 சிங்கள மாணவர்கள், இரண்டு தமிழ் மாணவர்கள்) உடைமையில் உயிர்கொல்லி போதைப்பொருள் மற்றும் போதைமாத்திரைகள் என்பன காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றை மீட்ட பொலிஸார் மாணவர்களை சந்தேகத்தில் கைது செய்தனர்.
இது தொடர்பில் விஞ்ஞானபீட பீடாதிபதிக்கும் தெரியப்படுத்தப்பட்டது. கைதான மாணவர்களுக்கு பரீட்சை நடைபெற்று வருவதாக பீடாதிபதி தெரிவித்ததைத் தொடர்ந்து, அவர்கள் விடுவிக்கப்பட்டனர். பல்கலைக்கழக ரீதியான நடவடிக்கையை எடுப்பதுடன் மாணவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவது தொடர்பில் ஆராயுமாறும் தெரிவித்து பொலிஸார் அவர்களை விடுவித்துள்ளனர். (அ-ஒ,5)

### வன்முறையைத்...

நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும் -இவ்வாறு சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் தெரிவித்தார்.
'உதயன்' பத்திரிகை அலுவலகத்துக்குள் அச்சுவேலியைச் சேர்ந்த மதக்குழு ஒன்று நேற்றுப் புகுந்தது. இது தொடர்பில் விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
'கண்ணுக்குக் கண் என்றார்கள். பல்லுக்குப் பல் என்றார்கள். நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டுங்கள். அங்கியை ஒருவர் கேட்டால் மேலங்கியையும் அவருக்குக் கொடுங்கள். இந்தச் செய்தியை உலகெங்கும் எடுத்துச் செல்லுங்கள், என் சீடர்களே' என்றார் இயேசு பிரான்.
முந்தையநாள் கோப்பாயில் சிறுமிகள் மீது பாலியல் வன்முறை செய்த குற்றச்சாட்டின் கீழ் பாதிரி ஒருவர் தேடப்படுகின்றார். அச்சுவேலியில் அடுத்த வீட்டு அணங்கின் தலையில் கல் வீசிக் கடுங்காயம் ஏற்படுத்திய போதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இன்று (நேற்று) 'உதயன்' ஊடக அறைக்குள் புகுந்தது போதகர் தலைமையில் காட்டேரிக் கூட்டம் காவாலிக் கூட்டம் காட்டுமிராண்டிக் கூட்டம், மதமாற்றச் சபை என்ற போர்வையில் வன்முறையைத் தூண்டும் கூட்டம் தாக்கியுள்ளது. சைவ மக்கள் ஒவ்வொருவரும் சிவ சேனையாக மாறி உள்ளனர். மதமாற்றிச் சபை அலுவலகங்களைக் காவல் துறை இழுத்து மூட வேண்டும். வன்முறையைத் தூண்டுவோரை, சட்டங்களை அப்பட்டமாக மீறுவோரைத் தலையிட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்தவேண்டும். வடமாகாணத்தில் அரசு நடவடிக்கையில் இறங்கவேண்டும். சைவ மக்களின் வேண்டுகோள் இதுவே - என்றுள்ளது. (அ-ஒ,66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரிங்கு சிங் காட்டடி கொல்கத்தா திரில் வெற்றி



நேற்றையதினம் இடம்பெற்ற ஐ.பி. எல். தொடரின் ஆட்டமொன்றில் ரிங்கு சிங்கின் அபாரமான ஆட்டத்தால் இறுதிப்பந்தில் மயிர்கூச்செறியும் வெற்றியைப் பதிவு செய்தது கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி.

ரசித் கான் தலைமையில் களமிறங்கிய குஜராத் அணி நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடியது. தொடர்ந்தும் குஜராத் அணிக்காக தமிழக வீரர்களான சாய் சுதர்சன் மற்றும் விஜய் சங்கர் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்க நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 204 ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. சாய் சுதர்சன் 38 பந்துகளில் 53 ஓட்டங்களையும், அதிரடித் துடுப்பாட்டத்தை வெளிக்காட்டிய விஜய் சங்கர் 5 சிக்ஸர்கள், 4 பவுன்டரிகள் அடங்கலாக 24 பந்துகளில் 63 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் கொல்கத்தா சார்பாக சுனில் நரைன் 3 விக்கெட்டுக்களையும் சுயாஸ் சர்மா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

205 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு வெங்கடேஸ் ஐயர், நிதிஸ் ராணா இணை ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்த போதிலும் மத்திய வரிசை வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க ஆட்டம் குஜராத் அணியின் பக்கம் திரும்பியது. கொல்கத்தா அணி 19 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 176 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. இறுதி ஓவரில் 29 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவை என்ற நிலையில், களத்திலிருந்த ரிங்கு சிங் யாஷ் டயால் வீசிய இறுதி ஓவரின் கடைசி 5 பந்துகளையும் சிக்ஸருக்குப் பறக்கவிட வெற்றியிலக்கை அடைந்தது கொல்கத்தா அணி. 6 சிக்ஸர்கள் ஒரு பவுன்டரி உள்ளடங்கலாக 21 பந்துகளில் 48 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தின் போக்கையே மாற்றி கொல்கத்தா அணியை வெற்றி பெறச் செய்த ரிங்கு சிங் ஆட்டநாயகனாகத் தேர்வானார். (ஒ-ரி1)

# மதத்தால் நாம் முரண்படக்கூடாது

## உதயன் சம்பவம் தொடர்பில் சிறீதரன் எம்.பி. அறிக்கை



யாழ்ப்பாணம், ஏப். 10

தமிழர்கள் நாங்கள் மதத்தால் முரண்பட்டு சண்டையிடாமல், ஒற்றுமையாக இருந்து எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளவேண்டும். ஊடகம் ஒரு செய்தியை பிரசுரித்தமைக்காக நிறுவனத்துக்குள் புகுந்து அடாவடியாகச் செயற்பட்டு ஊடக சுதந்திரத்துக்கு களங்கம் ஏற்படுத்தக்கூடாது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

உதயன் பத்திரிகை அலுவலகத்தினுள் மதக் கும்பல் ஒன்று உள்நுழைந்து அமைதியின்மையை ஏற்படுத்தியமை தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அச்சுவேலி பகுதியில் போதகர் ஒருவர் பொதுமக்களை தாக்கியமை தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அந்தச் சம்பவம் தொடர்பான செய்தி பிரசுரமாகி இருந்தது. அதனைக் காரணம் காட்டி, ஊடக நிறுவனத்துக்குள் உள்நுழைந்த கும்பல் அநாகரிகமாகச் செயற்பட்டுள்ளது. இது ஒரு ஏற்றுக் கொள்ள முடியாத விடயம்.

அண்மைக் காலமாக தமிழர் தாயகத்தில் மதவாதம் தலைதூக்கியுள்ளது. நினைத்த இடத்தில் புத்தர் சிலை வைப்பதும், ஏனைய மதங்களது சிலை வைப்பதும் என நிலைமை மோசமாகியுள்ளது. இது ஒரு ஆரோக்கியமான விடயம் அல்ல.

தமிழர்கள் நாங்கள் மதத்தால் முரண்பட்டு சண்டையிடாமல், ஒற்றுமையாக இருந்து எமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும். நாங்கள் அனைவரும் தமிழர் என்ற ரீதியில் ஒற்றுமையாக இணைந்து பயணிக்க வேண்டும்- என்றார். (ஒ-இ)


**நாஹா மருத்துவ நிலையம்**

பாரிச வாதத்தினால் வரும் கை, கால், செயலிழப்பு, முழங்கால் சிரட்டை பாதிப்பு, உடனடி நிவாரணம் வழங்கும் மருந்தியல். தீராத புண்கள் அல்சர், பிறசர், சிறு நீரக செயலிழப்பு - சிறப்பு சிகிச்சை

T.P.: 077 321 2740

வங்கி முன்லேன் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு) மானிப்பாய்.

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

யாழ். கோப்பாய் பகுதியில் வீடொன்றில் தங்கி நின்று குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகள் செய்வதற்கும் அனுபவமுள்ள பணிப்பெண் ஒருவர் தேவை.( 45 வயதிற்குட்பட்டவர்)

தொடர்பு: 077 345 3868

(CS24378(J-1)


# பஞ்சாப்பை பந்தாடிய சன் ரைசர்ஸ்

நேற்று இரவு நடைபெற்ற ஐ.பி.எல்லின் மற்றுமொரு ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி இலகுவான வெற்றியைப் பெற்றது சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சன் ரைசர்ஸ் அணித்தலைவர் மார்க்ராம் பஞ்சாப் அணியை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார். இதன்படி துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்பம் முதலே அதிர்ச்சி கொடுத்தனர் சன் ரைசர்ஸ் பந்து வீச்சாளர்கள். பஞ்சாப் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் வந்த வேகத்திலேயே பவிலியன் திரும்பினர். அணித்தலைவர் என்ற ரீதியில் தனி ஆளாக அணியின் மீட்சிக்காகப் போராடினார் ஷிகர் தவான். வேறெந்த வீரர்களும் அவருக்கான இணைப்பாட்டத்தை வழங்கியிராத போதிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தவான் ஒரு ஓட்டத்தால் சதத்தைத் தவறவிட்டார். 5 சிக்ஸர்கள், 12 பவுன்டரிகள் உட்பட 66 பந்துகளில் 99 ஓட்டங்களைப் பெற்றார். இதன்மூலம் நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்களைப் பெற்றது பஞ்சாப் கிங்ஸ் அணி. பந்துவீச்சில் சன் ரைசர்ஸ் சார்பாக மார்க்கன்டே 4 விக்கெட்டுக்களையும் ஜான்சன், மாலிக் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களையும் புவனேஸ்வர் குமார் ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினர்.

144 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கிக் களமிறங்கிய சன் ரைசர்ஸ் அணி 17.1 ஓவர்களில் பதற்றமில்லாத வெற்றியைப் பெற்றது.



சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ராகுல் திரிபதி 3 சிக்ஸர்கள் 10 பவுன்டரிகள் அடங்கலாக 48 பந்துகளில் 74 ஓட்டங்களைப் பெற்றார். மார்க்ராமும் தன் பங்குக்கு 21 பந்துகளில் 37 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுக்க இலகுவான வெற்றியொன்றைப் பதிவு செய்தது சன் ரைசர்ஸ் ஹைதராபாத் அணி. பந்துவீச்சில் பஞ்சாப் அணி சார்பில் அர்ஸ்தீப் சிங் மற்றும் ராகுல் சகார் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். ஆட்டநாயகனாக பஞ்சாப் அணித்தலைவர் தவான் தெரிவானார். (ஒ-ரி1)


# மரண அறிவித்தல்

மலர்வு 03 - 01 - 1933



உதிர்வு 09 - 04 - 2023

## திருமதி தவமணிதேவி தர்மலிங்கம்

கருகம்பனையை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி தர்மலிங்கம் நேற்று (09.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு இளையபிள்ளையின் அன்பு மகளும், சீனித்தம்பி பார்வதிப்பிள்ளையின் மருமகளும், காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், அமரர் சத்தியசீலன் (முகாமையாளர்-வலி. கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் தாயாரும், தயாளினியின் அன்பு மாமியாரும், பிரஷாந்-கைலாயினி (இலண்டன்), நிவேதிகா (ஆசிரியர்- மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்), ரவிஷங்கர் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், முருகையா, பரமசிவன், விசாகமூர்த்தி, இர்ாசமணி மற்றும் தியாகராஜா, சிவஞானம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.04.2023) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(CS 24404(J-1)

தகவல்:
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'உதயன்'...

யாழ்ப்பாணம், அச்சுவேலியில் உள்ள சபை ஒன்றின் போதகர் தலைமையில் வந்த சுமார் 30 பேர் கொண்ட கும்பலே இந்தக் காட்டுமிராண்டித்தனமான காரியத்தில் ஈடுபட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் தீவிர விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**வீடு புகுந்து தாக்குதல்**

அச்சுவேலியிலுள்ள 'அசெம்ளி ஒஃப் ஜீவ் வார்த்தை' என்ற மதக்குழுவின் போதகர் உட்பட மூவர் நேற்றுமுன்தினம் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர். சபைக்கு அருகில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த பெண்ணின் கழுத்தை நெரித்துத் தாக்கினர் என்ற முறைப்பாட்டுக்கு அமையவே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வீட்டுக்குள் அத்துமீறிப் புகுந்த போதகரும், ஏனையோரும் தன்னையும், வீட்டிலிருந்த தாயையும் தாக்கினர் என்று வங்கி உத்தியோகத்தரான பெண் அச்சுவேலிப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். பாதிப்புக்குள்ளான பெண் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளார். அதிக ஒலி எழுப்பப்பட்டமையால் ஏற்பட்ட முரண்பாடு இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குக் காரணமாக இருக்கலாம் என்று அயல் மக்கள் கூறுகின்றனர். ஆனால், சபை மீது கற்கள் வீசப்பட்டமையாலேயே அந்த வீட்டுக்குச் சென்றோம் என்று போதகரும், ஏனைய இருவரும் பொலிஸ் விசாரணையில் தெரிவித்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான செய்தி நேற்றைய 'உதயன்' பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

**ஆரம்பமே அடாவடி**

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' பத்திரிகை தலைமையகத்துக்கு மினி பஸ் ஒன்றிலும், பட்டா ரக வாகனம் ஒன்றிலும் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமிகள் என்று சுமார் 30 பேரைக் கொண்ட கும்பல் ஒன்று வந்திறங்கியது. அலுவலகப் பாதுகாப்பு உத்தியோகத்தரை மீறி அந்தக் கும்பல் வரவேற்பறைக்குள் அத்துமீறி நுழைந்து "போதகரைப் பற்றி எப்படிச் செய்தி போடுவீர்கள்?" "யார் இந்தச் செய்தியைத் தந்தார்கள்?" என்று சத்தமிட்டு, தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து, அநாகரிகமாக நடந்து கொண்டதுடன், அங்கு பணியில் இருந்தவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டது. இது தொடர்பாக ஆசிரியர் பீடத்துக்கு அறிவிக்கப்பட்டு ஆசிரிய பீடத்தினர் வரும் முன்னர் அலுவலக வாயிலை மறைத்து, எவரும் உள்ளே செல்லமுடியாத வகையில் தரையில் அமர்ந்து அட்டகாசம் செய்யத் தொடங்கியது அந்த மதக்கும்பல்.

**பத்திரிகைக்கு அச்சுறுத்தல்**

'உதயன்' ஆசிரியர் பீடப் பணியாளர்கள் இருவர் அந்தக் கும்பலை அணுகி, என்ன கோரிக்கையோடு அவர்கள் வந்துள்ளார்கள் என்று அறியவும், அது தொடர்பில் தீர்வொன்றைக் காணும் வகையிலும் கலந்துரையாட முற்பட்டனர். ஆனால், அதற்கு அந்தக் கும்பல் ஒத்துழைக்கவில்லை.

"போதகர் தொடர்பாக வெளியான செய்தியை எவ்வாறு வெளியிடுவீர்கள்?" என்று கேட்டு அந்தக் கும்பல் குழப்பம் விளைவிப்பதிலேயே குறியாக இருந்தது. தங்களது போதகர் கைது செய்யப்படவில்லை என்றும், பொய்யான தகவல்களை வெளியிடுகிறீர்கள் என்றும் அந்தக் கும்பல் தர்க்கித்ததுடன் ஆசிரிய பீடப் பணியாளர்களைச் சுற்றிவளைத்து அச்சுறுத்தும் வகையிலும் செயற்பட்டது.

'போதகரும் ஏனைய இருவரும் அச்சுவேலிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதுவே உரிய ஆதாரங்களோடு செய்தியாக்கப்பட்டுள்ளது' என்று அந்தக்கும்பலுக்குவிளக்கமளிக்கப்பட்டது. "போதகர் கைது செய்யப்படவில்லை, ஆனால், பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்" என்று ஒரு புதிய விளக்கத்தை, அந்தக் கும்பல் சொல்லத் தொடங்கியது. 'கைது செய்யப்பட்டால் தானே பிணையில் விடுவிப்பார்கள்" என்று சொன்னதும், அந்த விடயத்தை விடுத்து சகட்டுமேனிக்கு கூச்சல் எழுப்பி, திசைமாற்ற முற்பட்டது அந்தக்கும்பல்.

'செய்தியில் தவறு ஏதேனும் இருக்குமானால் அது தொடர்பான ஆதாரங்களையும் விளக்கதையும் சமர்ப்பித்தால், உரிய வகையில் அதை ஆராய்ந்து முடிவெடுப்போம். அவ்வாறில்லாவிட்டால் சட்டரீதியாக இந்தவிடயத்தை அணுகுங்கள்" என்று பக்குவமாக ஆசிரிய பீடத்தினரால் அந்தக் கும்பலுக்கு திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டபோதும், அந்தக் கும்பல் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல், காட்டுமிராண்டித்தனமான முறையில், உரத்த கூச்சல், குழப்பங்களில் ஈடுபட்டது.

'உதயன்' பத்திரிகை நிறுவனப் பணியாளர்களை அந்தக் கும்பலைச் சேர்ந்தோர் அனுமதியின்றி, கைத்தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்ததுடன், காணொலிப் பதிவும் மேற்கொண்டனர்.

**மறைந்திருந்த போதகர்**

இந்தக் கும்பலின் அட்டூழியம் தொடங்கியபோது, 'இந்த விடயத்துடன் நேரடியாகத் தொடர்புடைய எவரேனும் இருந்தால் முன்வந்து பேசுங்கள்' என்று 'உதயன்' ஆசிரிய பீடத்தினர் கோரியபோது எவரும் முன்வரவில்லை. கும்பலாகச் சுற்றி நின்று பெரும் சத்தமிட்டவண்ணமே இருந்தனர். நீண்ட நேரத்தின் பின்னரே அந்தக் கும்பலில் இருந்த ஒருவர் 'தானே அந்தப் போதகர் ' என்று வெளி வந்தார். 'ஏனையோரை வெளியே அனுப்பிவிட்டு உங்களின் பிரச்சினை தொடர்பில் நீங்கள் பேசுங்கள்' என்று கேட்டபோது, 'என் மீதுள்ள விசுவாசத்தில் அவர்கள் கதைக்கின்றார்கள்' என்று கூறிய போதகர், 'உதயன்' ஆசிரியர் பீடத்தினருடன் பேசுவதை தவிர்த்தார்.

**தாக்க முயற்சி**

ஒருகட்டத்தில் அந்தக் குழு ஆசிரியர் பீடப் பணியாளர்களைச் சுற்றிவளைத்து அவர்களைத் தள்ளி தாக்குதல் நடத்தும் வகையில் செயற்பட ஆரம்பித்தது. அதையடுத்து யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து 'உதயன்' தலைமையகத்துக்குள் இருந்தவர்கள் ஒவ்வொருவராக வீதிக்குச் சென்று அங்கு நின்றிந்த மினிபஸ் மற்றும் பட்டா ரக வானத்துக்குள் ஏறினர். யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் இருந்து பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்துக்கு வந்தனர். அதை அவதானித்த அந்தக்கும்பல் அங்கிருந்து நழுவத் தொடங்கியது. இறுதிவரையில் உதயனில் வெளியான செய்தியில் தவறு உள்ளதா? என்பது தொடர்பில் அந்தக் கும்பல் எதுவும் கூறவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பில் 'உதயன்' பத்திரிகை நிறுவனத்தால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸாரால் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**போதகரின் பின்னணி**

'அசெம்ளி ஒஃப் ஜீவ வார்த்தை' என்ற இந்த மதச்சபையின் போதகர் ஆரம்பத்தில் இன்னொரு சபையின் போதகராகவே இருந்தார். ஆயினும் அந்தச் சபையினர் குறித்த போதகரை இடைநிறுத்தியதால், தனியாக 'அசெம்ளி ஒஃப் ஜீவ வார்த்தை' என்ற பெயரில் மதக்குழுவை தொடங்கி நடத்தி வருகிறார். இந்தச் சபைக்குச் சொந்தமான தேவாலயம், பொதுக்காணியொன்றை அடாத்தாகப் பிடித்தே அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**குவியும் கண்டனங்கள்**

கிறிஸ்தவ மக்களின் புனிதநாளான உயிர்த்த ஞாயிறு தினத்தில் குறித்த மதச்சபை மிலேச்சத்தனமாக நடந்து கொண்டமைக்கும், ஊடக நிறுவனத்துக்குள் அத்துமீறி, அச்சுறுத்தி நிகழ்த்திய அட்டூழியத்துக்கும் பல தரப்புகளும் தங்கள் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

(அ-எ-26)

## 'உதயன்' சம்பவத்துக்கு...

நிறுவனத்தில் மேற்கொண்ட அடாவடிகளை வன்மையாகக் கண்டிப்பதாக சைவமகாசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

தொடர்ச்சியாகப் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சந்தித்து வரும் மத மாற்றக் குழுக்கள், உண்மையை வெளிப்படுத்தியதற்காகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு வழிகோலும் வகையில் செய்தியை பிரசுரித்தமைக்கு ஊடகத்தை அச்சுறுத்தி அடிபணிய வைக்க முயன்ற செயலானது மிலேச்சத்தனமானது.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசியப் பற்றுறுதிக்காக அது சார்ந்த உண்மைச் செய்திகளை வெளியிட்டமைக்காக பலமுறை தாக்கப்பட்ட மிகத் துயரமான சம்பவங்களை இந்த ஊடகம் சந்தித்திருந்தது.

போர்க் காலத்தில் ஏற்பட்ட வலியை விட தற்போது மண்ணின் மக்கள் சார்ந்த மனிதநேய செய்திக்காய் புதிதாய் சொந்த மண்ணில் முளைக்கும் குழுக்களால் அச்சுறுத்தப்படுவது மிகுந்த துயரத்தைத் தருகின்றது.

இவ்வாறான குழுக்கள் சமூக அமைதி மத நல்லிணக்கத்துக்கு மட்டுமன்றி ஊடக சுதந்திரத்துக்குமே அச்சுறுத்தலாக மாறியுள்ளன என்பது இன்று நிதர்சனமாகியுள்ளது. உடனடியாக குற்றவாளிகள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வலியுறுத்துகின்றோம்.

இவ்வாறான செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க அனைத்து மரபார்ந்த சமயத் தலைவர்களும் இவ்வாறான மதக்குழுக்களின் செயற்பாட்டை வன்மையாகக் கண்டித்து சமூக நீதியையும் மதத்தின் பெயரால் நடைபெறும் அநீதியையும் தடுத்து பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் வேண்டி நிற்கின்றோம் - என்றுள்ளது. (ஒ-125)

## ஊடக...

களை மேற்கொண்டதை உருத்திர சேனை வன்மையாகக் கண்டிக்கின்றது. தாக்குதல் முயற்சியானது ஊடக சுதந்திரத்தின் மேல் தொடுக்கப்பட்ட போர் ஆகும்.

இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் ஆர்.சுஜீவன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்;

அச்சுவேலியில் அனுமதி இன்றி நடத்தப்படும் சபை ஒன்றின் காடையர்களால் கடந்த வெள்ளிக்கிழமை அன்று தமது சட்டவிரோத சபையின் அருகில் இருந்த அப்பாவி குடும்பப் பெண் மீது, தனது சபை கூடாரம் மேல் கல் எறிந்தார்கள் என்று போலியான காரணம் கூறி நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தக்குதலைத் தொடர்ந்து சபையின் போதகரும் அவரின் மகனும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்பு பிணையில் விடப்பட்டனர்.

இந்த மதவெறித் தாக்குதல் சம்பந்தமான செய்தியை தமது பத்திரிகையில் வெளியிட்டனர் என்ற காரணத்தால் இன்றைய தினம் (நேற்று) குறித்த சட்டவிரோத சபையை சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட காடையர் கூட்டம் 'உதயன்' பத்திரிகை அலுவலகத்தை முற்றுகையிட்டு ஊழியர்கள் மேல் தாக்குதல் முயற்சிகளை மேற்கொண்டதை உருத்திர சேனை வன்மையாகக் கண்டிக்கின்றது. குறித்த தாக்குதல் முயற்சியானது ஊடக சுதந்திரத்தின் மேல் தொடுக்கப்பட்ட போர் ஆகும்.

கடந்த 2020 ஆம் ஆண்டும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் மற்றும் ஒரு பத்திரிகை நிறுவனமும் கிறிஸ்தவர்களால் பேருந்தில் ஆள்கள் கொண்டு வரப்பட்டு தாக்குதலுக்குட்படுத்தப்பட்டது உலகம் அறிந்த விடயமே. அதே பாணியிலேயே இன்றும் பேருந்தில் காடையர்கள் கொண்டுவரப்பட்டு 'உதயன்' பத்திரிகை மேல் தாக்குதல் முயற்சி செய்யப்பட்டுள்ளது. இனியேனும் தமிழர்கள் மதமாற்றத்தின் கொடூர முகத்தை உணர்ந்து விழிப்புடன் செயற்படாவிட்டால் நாளை தமிழர்கள் தமது சொந்த நிலத்தில் இம்மியளவேனும் சுதந்திரம் இல்லாத ஓர் இனமாக மாறுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை - என்றுள்ளது.

(அ-ஒ,இ)

## அமைச்சர்...

பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

போதகர் ஒருவர் தலைமையிலான மதக்கும்பல் ஒன்று யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள 'உதயன்' பத்திரிகை தலைமையகத்துக்குள் புகுந்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டது. இது தொடர்பாக 'உதயன்' நிர்வாக இயக்குநர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் கவனத்துக்குக் கொண்டு சென்றதுடன், ஊடகங்கள் மீதான அச்சுறுத்தல்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்துள்ளார். (அ)

## செட்டிகுளத்திலும்...

இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான கொந்தளிப்பு அடங்குவதற்கு முன்னரே, தமிழ் மக்கள் வாழும் செட்டிகுளத்தில் நேற்றுமதியம் திடீரென புத்தர் சிலை ஒன்று 'அநாதரவாக' வைக்கப்பட்டிருந்தது.

செட்டிகுளம் - மன்னார் வீதியில், செட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பழைய புகையிரத நிலையம் முன்பாக வீதியோரத்தில் சிமெந்துக் கற்களை அடுக்கி சுமார் ஒன்றரை அடி உயரமுடைய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. பின்னர் அதைவைத்த 'மன நலம் பாதிக்கப்பட்ட நபர்' இனங்காணப்பட்டு, கைது செய்யப்பட்டார். அவர் வைத்த புத்தர் சிலையும் அங்கிருந்து அகற்றப்பட்டது.

(ஒ,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் குழப்பம்

கொழும்பு, ஏப். 10

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் ரோஹினி மாரசிங்கவுடன் இணைந்து பணியாற்ற முடியாது என்று, ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்கள், ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

ஆணையாளர்களான கலாநிதி விஜித நாணயக்கார, கலாநிதி நிமல் கருணாசிறி மற்றும் களுபான பியரத்ன தேரர் ஆகியோரின் கையொப்பத்துடன் இந்தக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்துக்கு முரணாக ஆணைக்குழுவின் தலைவர் செயற்படுவதாகவும், ஆணைக்குழு உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கு செவிசாய்க்காமல் தனது தனிப்பட்ட விருப்பத்துக்கு அமைய செயற்படுவதாகவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை தலைவர் தொடர்ந்து புறக்கணித்ததால், கடந்த பெப்ரவரி மாதம் ஆணைக்குழுவின் முன்மொழிவுகளுக்கு உறுப்பினர்கள் அனுமதி வழங்கவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் உயர் பதவியை எதிர்பார்த்தே அவர் இவ்வாறு நடந்து கொள்வதாகவும் இது தொடர்பில் உடனடியாக கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தலைவர் உட்பட 5 பேர் அங்கம் வகிக்கின்ற நிலையில், அவர்களில் மூவர் தமது கையொப்பத்துடன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை- பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிலும் அதன் தலைவருக்கு எதிராக உறுப்பினர்கள் இவ்வாறு கடிதம் அனுப்பியமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

# உள்ளூராட்சித் தேர்தல் இறுதி முடிவு நாளையாம்

கொழும்பு, ஏப். 10

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு நாளை கூடவுள்ளது.

தேர்தலை நடத்துவதற்கு அதிகாரிகளிடம் தொடர்ந்து பணம் கோரியதற்கு உரிய பதில் இதுவரை கிடைக்கவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எதிர்வரும் இரு தினங்களில் பிரதமருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஏப்ரல் 2[illegible] ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-இ)

# உள்ளூர் உற்பத்திகளின் விற்பனைக்கூடம்

தெல்லிப்பழை பிரதேச உற்பத்தியாளர்களின் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கூடம் இன்று திங்கட்கிழமை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. சித்திரைப் புத்தாண்டுக்கு பொருள்கள் வாங்கவுள்ளோர் எமது பிரதேச உற்பத்தி களைக் கொள்வனவு செய்து ஊக்குவிக்க வேண்டும் என்று பிரதேச செயலகத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய-9)


## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை
செய்யக்கூடிய் வீட்டுப்
பணிப்பெண் தேவை.

(CS 24390)(K-1)

077 719 5483

## English Classes

Grade - I to O/L
Grammar With Spoken
(வீடு வந்து கற்பிக்கப்படும்)
T.P.: 077 331 4608

(CS 49888)(N-1)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் பான்சி
ஹவுஸ் ஒன்றுக்கு ஆண்
வேலையாட்கள் தேவை.
அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 1324 319

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும்
உணவகமொன்றிற்கு
வேலையாட்கள் தேவை.
தொடர்பு: 077 7060 638

## வேலை வாய்ப்பு

**Green Engineers Technology Solution (PVT) Ltd** க்கு

தொழில்நுட்ப உத்தியோகத்தர் தேவை (TO) தகைமை தேசிய டிப்புளோமா தொலைதொடர்பு (N.D.T) உயர் டிப்புளோமா தொலை தொடர்பு (HNDT) சிஸ்கோ (Cisco) சான்றிதழ் அளிக்கப்பட்ட நெற்வேர்க் அசோசியேட் உடன் சிட்டி அண்ட் கில்ட்ஸ் டிப்புளோமா தகுதி 5/6 City and Guilds Diploma Level 5 0r/ 6 with Cisco certified Net work Associate (CCNA)

**CV ஐ Greenengineers@geng.lk க்கு அனுப்பவும்**

தொடர்புகளுக்கு :

076 441 4602, 076 441 0361, 076 821 9067

(CS 24634)(K-1)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 7390 413, 076 4365 814

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் ( 200.000/= )
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079
076 733 6093

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு.

**நிலப்பரப்பு**

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.
1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)
3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606
077 6385 683

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **அச்செழுப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது
  2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- ✓ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ✓ நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது).
- ✓ 1 பரப்பின் விலை காபெற் வீதியை பிரதான முகப்பாக கொண்ட காணிகள் 15 இலட்சம்.
- ✓ 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
077 8147 389
077 9865 457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 17 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
077 8147 389
077 9865 457

(CS 24346) (J-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



...பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.